## நாகப்பட்டினம் நகராட்சி

2024– ம் ஆண்டுஅக்டோபர் மாதம் 25– ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை தீர்மான நகல்

<table>
<tr><th>கூட்ட நடைபெற்ற நாள்</th><th colspan="3">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம்</th><th>தீர்மான எண்</th></tr>
<tr><td>25 –10–2024</td><td colspan="3">பொருள் எண். 1<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர் 2024 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும்</td><td>தீர்மானம் எண். 274<br>பதிவு செய்யப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="4">25 –10–2024</td><td colspan="3">பொருள் எண். 2<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகப்பட்டினம் நேதாஜி சாலையில் நெடுஞ்சாலைதுறையின் மூலம் நாகப்பட்டினம் அக்கரைப்பேட்டை – வேளாங்கண்ணி சாலையில் இரயில்வே கடவு எண் 48. அருகே மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்காணும், மேம்பாலம் அமைக்கும் பணிக்கு இடையூராக உள்ள நகராட்சி கட்டிடங்களை இடித்து அகற்றிட மாவட்ட நிர்வாகம் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அலுவலர்களின் நேராய்வில் அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்காணும் பொருள் தொடர்பாக மாவட்ட அளவில் நடைபெறும் வாராந்திர கூட்டங்களிலும் மற்றும் பணி முன்னேற்றம் தொடர்பான ஆய்வுகூட்டங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மேற்படி கட்டிடங்களை இடித்து அகற்றிடும் பணியில் முதற்கட்டமாக அம்மா உணவகம் கட்டிடத்தினை இடித்து உடன் அகற்றிடவும், அவ்விடத்தில் பதியப்பட்டு உள்ள பாதாளச்சாக்கடை கழிவுநீர் குழாயினை மாற்றி அமைத்திட அறிவுறுத்தப்பட்டது. மேலும், மேற்படி அம்மா உணவகத்தினை நாகூர் பேருந்து நிலைய வளாகத்தில் அமைத்திட ஏதுவாக இந்நகர்மன்ற தீர்மான எண். 244 நாள் 30.09.2024 அன்று நகர்மன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>நாகப்பட்டினம் பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பாதாளசாக்கடை கழிவுநீர் குழாய்களை மாற்றி அமைத்திடவும் மற்றும் அம்மா உணவகக் கட்டிடத்தினை துரிதமாக அகற்றி மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களால் அறிவுறுத்தப்பட்டதனைத் தொடர்ந்து பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு துறையின் மூலமாக நகராட்சி ஒப்பந்ததாரர்களின் மூலம் மேற்கொள்வதற்கு உரிய வழிகாட்டு நெறி முறைகளின்படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.ஆர்.கே.முத்துகிருஷ்ணன், நாகப்பட்டினம் என்பவரின் மூலமே உடன் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தி 07.10.2024 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்காணும் அம்மா உணவகத்திலிருந்து அகற்றப்பட்ட பொருட்களை நாகூரில் புதியதாக அமைக்கப்படவுள்ள அம்மா உணவகத்திற்கு பயன்படுத்திடவும், மீதம் பயன்படுத்திட இயலாத நிலையில் உள்ள பொருட்களை பொது ஏலம் கோரிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td><td rowspan="4">தீர்மானம் எண். 275<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td rowspan="3">அலுவலககுறிப்பு</td><td>1</td><td>மன்றம் அனுமதி வழங்கலாம்</td></tr>
<tr><td>2</td><td>மேற்கண்ட பணியின் நகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td></tr>
<tr><td>3</td><td>மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ந.க.எண். 3462/2024/இ1 | |
| 25 –10–2024 | **பொருள் எண். 3**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 மகாலெட்சுமி சுனாமி குடியிருப்பு பகுதியில் உள்ள பாதாள சாக்கடை குழாய் சேதமடைந்து பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக இருப்பதாலும், பொது சுகாதார கேடுவிளைவிப்பதாலும் அப்பகுதியில் உள்ள கழிவுநீர் குழாயை பாதாளசாக்கடையுடன் இணைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி பாதாளசாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.276<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 25 –10–2024 | **பொருள் எண். 4**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 20–ல் உள்ள வரதராஜர் பெருமாள் கோவில் வாசல் பகுதியில் மழை காலங்களில் மழைநீர் தேங்கி பொது மக்களுக்கு இடையூராக இருப்பதால் நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினரின் அறிவுறுத்தலின்படி புதியதாக பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.277<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 25 –10–2024 | **பொருள் எண். 5**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20–ல் பெருமாள் மேல வடம்போக்கித் தெருவில் மழைகாலங்களில் சாலைகளின் மழைநீர் தேங்கி பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூராக உள்ளதால் அப்பகுதியில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.278<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 25 –10–2024 | **பொருள் எண். 6**<br>. நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20–ல் நடுக்கன் தீர்த்த விநாயகர் சன்னதி தெருவில் சுடுகாடு செல்லும் சாலையில் மழைநீர் செல்லாமல் பாதை முற்றிலும் அடைத்துள்ளதால். அதனை புதியதாக மழைநீர் வடிகால் அமைத்து சுடுகாடு அருகில் உள்ள பிரதான வடிகால்களில் இணைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 79/2024/இ1 | தீர்மானம் எண்.279<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 25 –10–2024 | **பொருள் எண்.7**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 21–ல் உள்ள சலவைக்குளம் முகமதியார் தெருவில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் மழைநீர் தேங்கி பொது சுகாதார கேடு விளைவிக்கிறது. எனவே, மேற்காணும் பகுதியில் சிறுபாலம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 79/2024/இ1 | தீர்மானம் எண்.280<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 25 –10–2024 | **பொருள் எண்.8**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.22–ல் உள்ள அரியபத்திரபிள்ளை தெருவில் உள்ள சிறுபாலங்கள் சேதமடைந்து பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் அதனை சீர்செய்து மேலும், மழைகாலங்களில் மழைநீர் தேங்காமல் ஓடுவதற்கு ஏதுவாக புதியதாக இரண்டு எண்ணிக்கை சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்படி பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்..<br>ந.க.எண் 79/2024/இ1 | தீர்மானம் எண்.281<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 25 –10–2024 | **பொருள் எண்.9**<br>. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை)எண்.113 நாள்.05.09.2024–ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள அனைத்து நிலங்கள், கட்டிடங்கள், சேமிப்பு கட்டமைப்புகள், தொலைத்தொடர்பு கோபுரங்கள் ஆகியவற்றிக்கு வரி சீராய்வு மேற்கொள்ளப்படும் ஆண்டினை தவிர மற்ற ஒவ்வொரு ஆண்டிற்கும் சொத்துவரியில் 6 சதவீதம் உயர்வு செய்திட தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 விதி 264(2)க்கு Amendment வெளியிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1 மன்றம் பதிவு செய்யலாம்.<br>ந.க.எண் 1428/2024/அ1 | தீர்மானம் எண்.282<br>பதிவு செய்யப்பட்டது. |

25 –10–2024

**பொருள் எண்.10**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வருகின்ற வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்கண்ட அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ள 17.10.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1 | வார்டு எண் 1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு வெளியேற்றுதல் பணி. | 2.50 | திரு.பி.சிவசக்தி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.06 | –– |
| | | | திரு.கே.கோபால கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | –– | 1.10 |
| 2 | வார்டு எண் 1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் தேங்கும் மழைநீரை ஆயில் இன்ஜின் கொண்டு வெளியேற்றுதல் பணி. | 2.50 | திரு.பி.சிவசக்தி, ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.05 | –– |
| | | | திரு.கே.கோபால கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | –– | 1.20 |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலககுறிப்பு | | |
|---|---|---|
| | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம் |
| | 2 | வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். |
| | 3 | மேற்கண்ட பணிகளின் அவசியத்தினை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாருக்கு உடன் பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தி வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம் |

ந.க.எண். 2103/2023/இ1–1

தீர்மானம் எண்.283
அ.கு,
அனுமதிக்கப்பட்டது.

25 –10–2024

**பொருள் எண்.11**

நாகப்பட்டினம் நகராட்சியில் மாநில நிதிக் குழு பள்ளி மேம்பாட்டு மானியம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் 2024–25ல் கீழ்கண்ட நகராட்சி பள்ளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.21616/2024/எஸ்.எஸ்2, நாள்.10.09.2024 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து 18.10.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |

தீர்மானம் எண்.284
பதிவு செய்யப்பட்டது.
.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பட்டினச்சேரி (சம்பாதோட்டம்) நடுநிலை பள்ளியினை பராமரிப்பு செய்யும் பணி. | 3.00 | எஸ்.சத்தியநாரயணன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | 0.07 | -- |
| | | | பி.ரகுநாதன், ஒப்பந்ததாரர், நாகப்பட்டினம். | – – – | 0.90 |

மேற்கண்ட திட்டப்பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.எஸ்.சத்தியநாரயணன், நாகப்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு உடன் திட்டப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலககுறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவுச் செய்யலாம் |

ந.க.எண். 4393/2023/இ1

25 –10–2024

**பொருள் எண்.12**

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–24ன் கீழ் நாகப்பட்டினம் செல்லூர் கிராமத்தில் புல எண்கள் 160/2B2n, 101/1B1A, 160/5, 159/6, 159/2B, 158/4, 158/2B (பாரதிதாசன் உறுப்புக்கல்லூரி பின்புறம் புதியதாக பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளதால், மேற்படி கட்டுமானப் பணிக்குண்டான மண் பரிசோதனைக்கு ஆழ்துளை கிணறு மண் எடுத்து வழங்கும் பணியினை மேற்கொள்வதற்கு விலைப்புள்ளிகள் 18.10.2024 அன்று பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு,

| வ.எண் | நிறுவனத்தின் விவரம் | 10 மீட்டர் ஆழத்திற்கு போர்வெல் மூலம் மண் எடுத்தல் (வரிகல் உட்பட) | கூடுதலாக இடங்களின் ஆழ்துளை மூலம் மண் எடுத்தல் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 01 | RAMS SOIL SERVICE 12/4 Vidhya colony 3rd Street, KK Nagar Madurai . | ரூ.103250/– | ரூ.287684 /– | ரூ.390934/– |
| 02 | SASTHASOIL TESTING SERVICE, C–128, New Hig Colony GroundFloor, Shenbagathottam Annanagar, Madurai | ரூ.77880/– | ரூ.254880/– | ரூ–332760/– |
| 03. | VISWA GEOTECHNICAL SERVICES 407, KK Nagar, Madurai –20. | ரூ.94990/– | ரூ.278834 /. | ரூ. 373824/– |

மேற்காணும் பணியினை மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள SASTHA SOIL TESTING SERVICE C–128,

தீர்மானம் எண்.285 பதிவு செய்யப்பட்டது.

New Hig Colony Ground Floor, Shenbagathottam Annanagar, Madurai நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கவும் பணியின் அவசியம் கருதி தொடர்புடைய நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவுச் செய்யலாம். |

ந.க.எண். 1242/2023/இ1

---

25 –10–2024

**பொருள் எண்.13**

தீர்மானம் எண்.286
அ.கு,
அனுமதிக்கப்பட்டது

நாகப்பட்டினம் நகராட்சியில் பணிபுரியும் மற்றும் ஒய்வுப்பெற்ற பணியாளர்கள், அலுவலர்களுக்கான சேமநலநிதி வட்டி தொகை கணக்கீட்டு பணிகள் மேற்கொள்வதற்கு 04.10.2024 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | சேமநலநிதி வட்டி கணக்கீட்டு பணி பணியாளர்கள் ஒரு வருடத்திற்கு ரூ | சேமநலநிதி வட்டி கணக்கீட்டு பணி முன்மொழிவுகள் தயார் செய்ய ஒரு வருடத்திற்கு ரூ |
|---|---|---|---|
| 1 | சிந்தியா சாப்ட்வேர் எண்.22 எம்.எம்.கோவிலூர் பிரிவு, அக்சயா பள்ளி அருகில், திண்டுக்கல் – 5 | 5500/– | 4500/– |
| 2 | கோல்டன் கம்பியூட்டர்ஸ் எண்.143 முதல்தளம் பேருந்து நிலையம் அருகில், திண்டுக்கல். | 6900/– | 5900/– |
| 3 | விங்ஸ் கம்பியூட்டர்ஸ் எண்.49, டி.கே. விஜயராம் தெரு, கமர்சியல் காம்பிளக்ஸ், தேனி. | 6999/– | 6999/– |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1ல் கண்ட சிந்தியா சாப்ட்வேர் நிறுவனத்திற்கு சேமநலநதி வட்டி கணக்கீட்டு பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டடப்படுகிறது

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | அனுமதி வழங்கலாம் |
| | 2 | மேற்கொண்ட பணியின் செலவினத்தை (உத்தேசமாக ரூ.3 இலட்சம்) பொது நிதியிலிருந்து வழங்கலாம் |

ந.க.எண்.3453/2024/பி2

/உண்மை நகல்/

(ஒம்)
இரா,மாரிமுத்து

நகர்மன்ற தலைவர்